**EP 50 of 2020**

Date : 12.11.2025

ம.சா.1 : சாரு G.R

ம.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்

நான் தற்போது IOB வங்கியில் கிளை மேலாளராக 2024 ம் வருடம் முதல் பணிபுரிந்து வருகிறேன். எதிர்மனுதாரர் 2012 ம் வருடம் எங்கள் வங்கியில் கடன் வாங்கினார். எவ்வளவு தொகை வாங்கினார் என்றால் முந்தைய கிளை மேலாளர் கொடுத்துள்ளதால் எனக்கு தற்போது தொகை சரியாக சொல்ல தெரியவில்லை. எவ்வளவு தொகை கட்டியுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியும். என்னிடம் ஸ்டேட்மென்ட் உள்ளது. அதை பார்த்தார் என்னால் சொல்லமுடியும். எவ்வளவு மீத தொகை எதிர்மனுதாரர் கொடுக்கவேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 2017 ல் ரூ.3,66,000 மற்றும் வட்டி கொடுக்கவேண்டியிருந்தது. எதிர்மனுதாரர் வாகனம் வாங்குவதற்கு லோன் வாங்கியிருந்தார். வாகன கடன் சரிவர கட்டவில்லை என்றால் மேற்படி வாகனத்தை பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுத்தோமா என்றால் மேற்படி வண்டியை எதிர்மனுதாரர் எங்களிடம் காண்பிக்கவில்லை. RC Book ல் எங்களிடம் கடன் வாங்கியிருந்ததற்கான குறிப்பு இருப்பதால் அந்த வாகனத்தை விற்க முடியாது என்றால் சரிதான். நாங்கள் RTO அலுவலகத்தில் மேற்படி வண்டியை விற்க கூடாது என்று தடங்கல் மனு ஏதேனும் தாக்கல் செய்தோமா என்றால் எனக்கு தெரிந்து இல்லை. வானத்தை எதிர்மனுதாரர் விற்பனை செய்துள்ளாரா என்றால் எனக்கு தெரிந்து இல்லை. எதிர்மனுதாரர் எங்கள் வங்கியில் ரூ.4,55,090 கடன் வாங்கியுள்ளார் என்றும் அதில் ரூ.3,31,135 ஐ திருப்பி செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு LIC பாலிசியில் வந்த ரூ.92,000 மும் அவரது வங்கி கணக்கில் வந்ததை நாங்கள் எடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி காரை எதிர்மனுதாரர் சென்னையில் ஓட்டி வந்தார் என்றும் அங்கு ஏற்பட்ட பெருவெள்ளத்தில் மூழ்கிவிட்டது என்றும் அதனால் காப்பீட்டு நிறுவனத்தில் மனு கொடுத்து வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்தி மேற்கண்ட வாகனத்திற்கு NOC பெற்று வேறு நபருக்கு விற்று விட்டார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு உடுத்த உடை தவிர வேறு எந்த சொத்துக்களும் இல்லை என்றால் சரியல்ல. அவர் டிரைவராக வேலை பார்த்து

வருமானம் ஈட்டி வருகிறார். எதிர்மனுதாரர் மிகவும் நொடிப்பு நிலையில் இருப்பதால் அவரை கைது செய்ய தாக்கல் செய்யப்பட்ட மனு ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.